அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

நவம்பர் - 2024 | மரம் - 3 | கன்று - 11 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-




ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...

கிறிஸ்துவுக்குள் பாசத்திற்குரிய எனதன்பு ஒலிவமரக் கன்றுகள் இதழின் வாசகப் பெருமக்களே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த சிறார் இதழின் வழியாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒலிவமரக் கன்றுகள் இதழ் வயது வேறுபாடின்றி அனைத்து தரப்பினரையும் கவர்ந்திழுப்பதாக உங்கள் கடிதங்கள் வாயிலாக அறிந்து கர்த்தருக்கு நன்றி சொல்கிறேன். இதிலுள்ள எண்ணங்களும் எழுத்துக்களும் உங்கள் வாழ்வில் வளப்படுத்துவதாகவும், வடிவமைப்பதாகவும் இருக்க வேண்டுமென்று எண்ணி உங்கள் கரங்களில் தவழ விடுவதில் மிக்க மகிழ்ச்சி.

'வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம்' என்று நாட்டுப்புறங்களில் வளமையாக பயன்பாட்டில் ஒரு சொலவடை (A saying) உண்டு.

''வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம்; வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது- நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்'' (நல்வழி - 33).

பெரிய யானையின் உடலில் பட்டு உருவும் அம்பானது, மெல்லிய பஞ்சு மூட்டையின் மேல் பாயாது. இரும்பாலான நீண்ட கடப்பாரையால் பிளக்க முடியாத கருங்கல் பாறையானது, பசுமையான மரத்தின் வேருக்குப் பிளந்து போகும். அதுபோன்றே, கடுஞ்சொற்கள் இனிய சொற்களை ஒருபோதும் வெல்லாது. இனிய சொற்களோ எதையும் வெல்லும். அதாவது, கல்நெஞ்சத்தையும் கசிந்துருகச் செய்யும் வல்லமை இன்சொல்லுக்கு உண்டு என்பதே அதன் பொருள்.

வன்சொல்லால் வரப்போவது ஒன்றும் இல்லை. இனிய சொற்களால் இமயத்தையும் வெல்லலாம்! உலகோர் இதயத்தையும் வெல்லலாம்! அம்பினால் வெல்ல முடியாதவர்களையும் அன்பினால் வெல்ல முடியும்! இப்பேருண்மைகளை 2024 ஆண்டுகளுக்கு முன்பதாகவே செயல்வடிவம் கொடுத்தவர் நம் அன்பின் தகப்பன் இயேசு கிறிஸ்துவே.

...''இனிய நாவு எலும்பையும் நொறுக்கும் (நீதிமொழிகள் 25:15) என்று அதற்குச் சான்று பகர்கிறது. வேதாகமத்தின் முதல் பக்கம் தொடங்கி இறுதி பக்கம் வரை மனிதர்கள் மீது தேவன் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடே இடம்பெற்றுள்ளது. தேவன் அன்பாகவே இருப்பது போல, நமது வாழ்க்கையை அன்பினால் முழுவதும் அலங்கரிக்க ஒற்றை நாளில் சாத்தியமில்லை தான் (Rome is not built on one day). இதை இயேசுவின் நண்பர்களாகவும் சீடர்களாகவும் வாழ விரும்பும் நாம் ஒவ்வொருவரும் சற்று முயற்சி எடுத்தால் சாத்தியமாக்கிவிடலாம்.

போராட்டம் தான் வாழ்வின் இருத்தலை உறுதி செய்கிறது என்றார் தமிழறிஞர் ஒருவர். பவுலும் நல்ல போராட்டத்தை போராட அறைகூவல் விடுத்துள்ளார்.



ஆகையால் போராடி வசனத்தை வாழ்க்கையில் செயல்வடிவம் தருவதில் உறுதியாக வெல்ல உங்களுக்காக எனது அன்பும் ஜெபங்களும் எப்போதும் உண்டு. அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# ஆமணக்கு

''கர்த்தர்: நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே முளைத்ததும், ஒரு இராத்திரியிலே அழிந்துபோனதுமான **ஆமணக்குக்காகப்** பரிதபிக்கிறாயே. வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார் (யோனா 4:10-11).

நினிவே மக்கள் மனந்திரும்பியதின் நிமித்தம் தேவன் அவர்களை மன்னித்ததால் யோனா தீர்க்கதரிசி மிகவும் விசனமும் எரிச்சலும் அடைந்து, தான் இருப்பதிலும் சாவதே நலம் என்று கர்த்தரிடமே கூறினான். நகரத்துக்குக் கிழக்கேபோய், தனக்கு ஒரு குடிசையைப் போட்டுக்கொண்டு, நகரத்துக்கு என்னதான் நடக்கப்போகிறது என்பதை தான் பார்க்குமட்டும் அதின் கீழ் உட்கார்ந்திருந்தான். இத்தனை நடந்தும் கர்த்தர் யோனாவை வெறுத்துவிடவில்லை. அவனை அவனது மனமடிவுக்கு நீங்கலாக்கும்படி, ஒரு பாடத்தைக் கற்றுக்கொடுக்கும்படி ஒரு ஆமணக்கு செடியைக் கர்த்தர் முளைப்பித்தார்! அந்தச் செடி ஓங்கி வளர்ந்ததால் அவனுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாயிருந்தது. மறுநாளிலே தேவன் ஒரு பூச்சிக்கு கட்டளையிட, அது அந்த ஆமணக்குச் செடியை அரித்துப்போட்டது, செடி காய்ந்துபோனது. சூரியன் உதித்தபோது, தேவன் வெப்பமான கீழ்க்காற்றைக் கட்டளையிட்டார். வெயில் ஏற ஏற யோனா சோர்ந்துபோய், திரும்பவும், தான் இருப்பதிலும் செத்துப்போவது நலம் என்றான். தேவனோ யோனாவிடம், ஒரு நாளில் முளைத்து ஒரு இராத்திரியிலே பட்டுப்போன ஒரு செடிக்காக இவ்வளவாக பரிதபித்தால், மகா நகரமாகிய நினிவேக்காக பரிதபியாமலிருப்பேனோ என்று கேட்டார். தேவன் எவ்வளவு சாந்தமாகவும், ஞானமாகவும் யோனாவை அணுகினார் என்பதைக் காண்கிறோம். நமக்குள் வேர்கொண்டிருக்கிற கோப குணத்தை, பிறரைக் குற்றப்படுத்தும் குணத்தை வெறுத்து அகற்றிவிடுவோம்.





**ஆமணக்குச்** செடி (Castor) எப்பொழுதும் பசுமையோடு இருக்கும் ஒரு வகையான புதர்ச்செடியாகும். இதனுடைய அறிவியல் பெயர் Ricinus communis என்பதாகும். இது Euphorbiaceae என்னும் தாவரக் குடும்பத்தைச் சார்ந்தது. ஆமணக்கு குடும்பத்தில் 300 பேரினங்களும், 7,500-க்கும் மேற்பட்ட சிற்றினங்களும் உள்ளன. உலக அளவில் இத்தாவரங்கள் பரவி இருந்தாலும், ஆப்பிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் அதிக அளவில் காணப்படுகின்றன. இக்குடும்பத் தாவரங்களுள் 70 பேரினங்களும், 450-க்கும் மேற்பட்ட சிற்றினங்களும், இந்தியாவில் உள்ளன. தமிழ்நாட்டுக் கிராமப்புறங்களில் பரவலாகப் பயிரிடப்படும் தாவரம் ஆமணக்கு. கொட்டைமுத்துச் செடி என்றும் இது அழைக்கப்படுகிறது. ‘சித்திரகம்’, ‘ஏரண்டம்’ என்பன இதன் வேறுபெயர்களாக நிகண்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. ஆமணக்கு எண்ணெய், இலைகள், வேர், விதை, காய்கள் அத்தனையும் மருத்துவப் பொருளாகப் பயன் தருகின்றன.

ஆமணக்குச் செடி பத்து மீட்டர் உயரம் வரையில் வளரும். இதன் தண்டுப் பகுதியில் வெள்ளையான வண்ணத்தினைப் போன்ற மாவு படிந்து காணப்படுகின்றன. இந்த செடியில் இலை, விதைகள் எல்லாம் மருத்துவ குணங்களைக் கொண்டது. தாவரத்தின் இலைகள் மற்றும் தண்டுகளில் பூச்சிகளை விரட்டும் நச்சுகள் உள்ளன, இது ஒரு பயனுள்ள இயற்கை பூச்சிக்கொல்லியாக அமைகிறது. விவசாய விளை நிலங்களின் ஓரங்கள், தோட்டந்துரப்புகள், தரிசு நிலங்கள், மணல் பிரதேசங்கள், வளம் குறைந்த பகுதிகளிலும் இவை நன்றாக வளர்கின்றன. ஆமணக்கு வறண்ட நிலத்திலும் கூட நன்கு வளரும் தாவரம்.

இந்த தாவரத்தின் இலைகள் நம் உள்ளங்கையைப் போல தோற்றமளிக்கின்றன. இதில் மலர்கள் ஆண்டு முழுவதிலும் பூக்கின்றன. ஆண், பெண் வகைகளில் இரு விதமான மலர்கள் இதில் காணப்படுகின்றன. ஆமணக்குச் செடியின் முக்கியப் பயன்பாடாக அமைவது இதன் காய்கள்தான். காய்கள் பச்சை நிறமாக இருக்கும். அவை முற்றியதும் வெளிறிய வெள்ளை நிறத்துக்கு மாறிவிடும். ஆங்காங்கே கூர்மையாக முள் போன்று இருக்கும். வெயிலில் காயப்போட்டால் காய்கள் வெடித்துச் சிதறி விதைகள் வெளிப்படும். இவ்விதைகளையே, ‘ஆமணக்கு முத்து’, ‘ஆமணக்கங்கொட்டை’ என்பர்.

ஆமணக்கில் சிற்றாமணக்கு, பேராமணக்கு மற்றும் செல்வாமணக்கு ஆகிய மூன்று முக்கியமான வகைகள் உள்ளன. பேராமணக்குப் பொதுவாக ஆற்றங்கரையோரங்களில் பயிரிடப்படுகின்றது. இதனை படுக்கையாமணக்கு என்றும் கூறுவார்கள். சிற்றாமணக்கு விதைகளில் இருந்து எண்ணெய் மருத்துவ குணங்கள் நிறைந்தது. விளக்கெரிக்க இவ்வெண்ணெயைப் பயன்படுத்தியதால் விளக்கெண்ணெய் என்று பெயர் வந்தது. இந்த எண்ணெய் புகையின்றி எரியக்கூடியது.

60 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் நல்லெண்ணெய் (எள் எண்ணெய்), ஆமணக்கு எண்ணெய் (விளக்கெண்ணெய்) மட்டும்தான் பெருவாரியான மக்களின் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளன. மேல்தட்டு மக்கள் மட்டுமே, தேங்காய் எண்ணெய் பயன்படுத்தி வந்துள்ளனர். உடலுழைப்பாளிகள் பயன்படுத்தி வந்தது, ஆமணக்கு

எண்ணெய் மட்டுமே. வயல்வெளி, ஆறு, வாய்க்கால் மற்றும் ஏரிக்கரைகளிலும் தன்னிச்சையாக வளர்ந்து கிடந்த சிற்றாமணக்குச் செடிகளிலிருந்து விதைகளை மக்களே சேகரித்து, அவர்களின் வீட்டு அடுப்பங்கரையிலேயே எண்ணெய் தயாரித்து அதையே சமையலுக்கும், வலிகள் தீர்க்கும் தைலமாகவும் பயன்படுத்தி வந்துள்ளனர். தவிர வயிறு, குடல், கர்ப்பப்பை நோய்களுக்கும் ஆரம்பக்கட்ட மருந்தாக இதனை பயன்படுத்தியிருக்கின்றனர்.

நமது பாரம்பரிய மருத்துவ நோக்கில், குளிர்ச்சியைத் தரும் ஆற்றல் விளக்கெண்ணெய்க்கு உண்டு. இதனால் சிறு குழந்தைகளின் தலையில் விளக்கெண்ணெயைத் தடவுவர். வெயிலில் அதிக நேரம் நடந்து சென்றாலோ நின்று பணியாற்றினாலோ ஏற்படும் சூட்டைத் தணிக்க உள்ளங்காலில் விளக்கெண்ணெயைத் தடவிக்கொண்டு உறங்குவர். இது மூட்டு மற்றும் தசை வலியைப் போக்குவதில் பயனுள்ளதாக இருக்கிறது. சூட்டினால் ஏற்படும் வயிற்றுவலியைப் போக்க அடிவயிற்றில் விளக்கெண்ணெயைத் தடவுவர்.

இது பக்கவிளைவற்ற பாதுகாப்பான மலமிளக்கி. காய்ச்சிய எண்ணெய்யுடன் கால் பங்கு எடையில் கடுக்காய்பிஞ்சுப் பொடியைச் சேர்த்து நன்கு அரைத்து வாய்வு, மூலக்கடுப்பு, ரத்தமூலம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள், படுக்கப்போகும் முன் 5 மில்லி வரை குடித்து வர, அனைத்து மூலப்பிரச்சினைகளும் தீரும். விளக்கெண்ணெய் வயிற்றைச் சுத்தம் செய்வதற்காகவும், வயிற்றில் உள்ள பூச்சிகளை வெளியேற்றுவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. ஆயுர்வேத மருத்துவத்தில் வாய்வுத் தொல்லைகளிலிருந்து நிவாரணம் பெற இது உதவுகின்றது.

கோழைக்கட்டு, இரைப்பு, இருமல் உள்ளவர்களுக்கு விளக்கெண்ணெய் இரண்டு பங்கு, தேன் ஒரு பங்கு சேர்த்து உட்கொள்ள கொடுக்க வயிறு கழிந்து நோயின் தன்மை குறையும்.

பருப்பு வேகவைக்கும்போது அதில், இரண்டு துளி எண்ணெய்யை விட்டால், பருப்பில் உள்ள வாயு நீங்கிவிடும்.

விளக்கெண்ணெய் முகப்பரு, தோல் அழற்சி மற்றும் வறட்சி போன்ற தோல் நிலைகளுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இது முடி வளர்ச்சியைத் தூண்டுகிறது மற்றும் உச்சந்தலையின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

இந்த செடியின் இலைகள் பல நரம்பியல் பிரச்சனைகள், வலி, வீக்கம் ஆகியவற்றிற்கு நிவாரணியாக இருப்பதாக கூறுகின்றனர். ஆமணக்கு இலையுடன் சம அளவு கீழாநெல்லி இலையைச் சேர்த்து வெண்ணெய் போல அரைத்து எலுமிச்சம்பழம் அளவிற்கு காலையில் மட்டும் உள்ளுக்குள் கொடுக்க வேண்டும். மூன்று நாட்களுக்கு இவ்வாறு செய்ய, மஞ்சள் காமாலை குணமாகும். இந்த நாட்களில் உணவில் புளி, உப்பு நீக்கிப் பத்தியம் கடைபிடிக்க வேண்டும். ஆமணக்கு இலையை, விளக்கெண்ணெயிலேயே லேசாக வதக்கி, மூட்டுகளின் வீக்கம், வலிக்கு ஒத்தடம் இட்டால் வலி நீங்கும்; வீக்கம் குணமாகும்.

மேற்கண்ட சிகிச்சை முறைகளை எல்லாம் தகுந்த இயற்கை மருத்துவர் ஒருவரின் ஆலோசனையின் பேரில் மேற்கொள்வது மிகவும் முக்கியம்.

அற்புத மருத்துவ குணங்கள் உள்ள இந்த ஆமணக்குச் செடிகளுக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். ஆமணக்கு செடி அனைத்து இடங்களிலும் செழித்து வளர ஜெபிப்போம்.

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..



பேதுரு திரும்பிப் பார்த்தபோது, இயேசுவின் அன்புச் சீஷரும் பின்தொடர்கிறார் என்று கண்டார். இவரே இரவு உணவின்போது, இயேசுவின் அருகில் அவர் மார்புப் பக்கமாய்ச் சாய்ந்து கொண்டு, 'ஆண்டவரே உம்மைக் காட்டிக் கொடுப்பவன் எவன்?' என்று கேட்டவர்.

அவரைக் கண்ட பேதுரு இயேசுவிடம், 'ஆண்டவரே இவருக்கு என்ன ஆகும்?' என்று கேட்டார்.

இயேசு அவரிடம், 'நான் வரும்வரை இவன் இருக்க வேண்டும் என நான் விரும்பினால் உனக்கு என்ன? நீ என்னைப் பின்பற்றிவா' என்றார்.

ஆகையால் அந்தச் சீஷர் இறக்க மாட்டார் என்னும் பேச்சு சகோதரர் சகோதரிகளிடையே பரவியது. ஆனால் இவர் இறக்க மாட்டார் என இயேசு கூறவில்லை. மாறாக, 'நான் வரும்வரை இவன் இருக்க வேண்டும் என நான் விரும்பினால், உனக்கு என்ன?' என்றுதான் கூறினார்.

இந்தச் சீஷரே இவற்றிற்குச் சாட்சி. இவரே இவற்றை எழுதி வைத்தவர். இவரது சான்று உண்மையானது என நமக்குத் தெரியும்.

வேறு பல அரும் அடையாளங்களையும் இயேசு தம் சீஷர்கள் முன்னிலையில் செய்தார். அவையெல்லாம் புஸ்தகத்தில் எழுதப்படவில்லை. அவற்றை ஒவ்வொன்றாக எழுதினால், எழுதப்படும் புஸ்தகங்களை உலகமே கொள்ளாது எனக் கருதுகிறேன்.

இயேசுவே தேவகுமாரனாகிய கிறிஸ்து என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே புஸ்தகத்தில் உள்ளவை எழுதப்பெற்றுள்ளன.

பதினொரு சீஷர்களும் இயேசு தங்களுக்குப் பணித்தபடியே கலிலேயாவிலுள்ள ஒரு மலைக்குச் சென்றார்கள். அங்கே அவரைக் கண்டு பணிந்தார்கள். சிலரோ சந்தேகமுற்றார்கள்.


'வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்று கூறினார்.

பின்பு இயேசு பெத்தானியா வரை அவர்களை அழைத்துச் சென்று தம் கைகளை உயர்த்தி அவர்களுக்கு ஆசி வழங்கினார். அவர்களுக்கு ஆசி வழங்கிக்கொண்டிருந்தபோதே அவர் அவர்களிடமிருந்து பிரிந்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்.


அவர்கள் அவரை வணங்கிவிட்டுப் பெரு மகிழ்ச்சியோடு எருசலேம் திரும்பிச் சென்றார்கள். அவர்கள் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்.

தொடரும்...


# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)





நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன். - 2 தீமோத்தேயு 1:12




அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. - அப்போஸ்தலர் 4:12




நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள். - எபிரெயர் 6:11




கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவை களெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். - பிலிப்பியர் 4:8

# ஜெபக்குறிப்பு

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தைச் சேர்ந்த 14 வயது சிறுவன் பிரபல வரலாற்று புதின தொலைக்காட்சி தொடரான கேம் ஆஃப் த்ரோன்ஸ் தொடரில் வரும் பெண் கதாபாத்திரமான டேனிரோ டார்கேரியன் (Daenero) கதாபாத்திரத்தினை மையமாகக் கொண்டு உருவான டேனி சாட் ஜிபிடியுடன் பல மாதங்களாக உரையாடி வந்துள்ளான்.

சாதாரணமாகத் தொடங்கிய உரையாடல் காதல், காமம் உள்ளிட்ட விஷயங்களை பற்றியும் நகர்ந்துள்ளது. இந்த உரையாடல்கள் ஒரு கட்டத்தில் சிறுவனை டேனி மீது காதல் கொள்ள செய்துள்ளது. எதார்த்தத்தில் இருந்து தன்னை முற்றிலுமாக துண்டித்துக்கொண்டு சேட் ஜிபிடியே கதி என்று இருந்துள்ளான்.

நிஜ உலகை வெறுக்கத்தொடங்கிய சிறுவன், தான் காதலியாக கருதும் உலகத்தில் இல்லவே இல்லாத அந்த சாட் ஜிபிடியுடன் வாழ வேண்டும் என்றால் தானும் இந்த உலகத்தில் இருக்கக்கூடாது என்ற விபரீத முடிவுக்கு வந்து இறுதியில் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளான். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் சம்பந்தப்பட்ட சாட்ஜிபிடி நிறுவனம் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மத்திய அரசு வெளியிட்ட தேசிய குற்ற ஆவணக் காப்பக தரவுகள் 2022இன்படி, இந்தியாவில், அதிக மாணவர் தற்கொலைகள் நிகழும் மாநிலங்கள் பட்டியலில் மகாராஷ்டிரா முதல் இடத்திலும், தமிழ்நாடு 2வது இடத்திலும் இருக்கிறது. இந்தியாவில் 13,044 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டனர். அதில் தமிழ்நாட்டில் 1,416 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

தற்கொலை எதற்கும் தீர்வாகாது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். தேவன் நாம் நன்றாக வாழும்படி விரும்புகிறார். நம்முடைய பயத்திற்கும், மகிழ்ச்சியின்மைக்கும் தீர்வு என்ன என்பதை தாவீது சொல்கிறார்: ''நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவி கொடுத்து, என்னுடைய எல்லா பயத்துக்கும் என்னை நீங்கலாக்கி விட்டார்'' (சங். 34:4) என்றார். நாம் பயப்படுகிற நேரங்களில் கர்த்தரைத் தேடினால் அவர் நமக்கு செவி கொடுத்து நம்முடைய எல்லா பயத்திலிருந்தும் நம்மை நீங்கலாக்கி இரட்சிப்பார்.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத்தேயு 11:28) என்றார் இயேசு. நம் பாரங்களை இயேசுவினிடத்தில் ஒப்புக்கொடுத்து, அவர் மீது நம்பிக்கையாய் இருப்போமானால், அவர் நமக்கு மிகுந்த மகிழ்ச்சி தருவார்.

★ சிறுவர்கள் கர்த்தருக்கு பிரியமாய் வாழவும், தேவன் அவர்களை பாதுகாத்திடவும் ஜெபிப்போம். தற்கொலை எண்ணங்களை தூண்டுகிற பிசாசின் கிரியைகள் நிர்மூலமாக ஜெபிப்போம்.

★ எதிர் பால் மீது ஏற்படும் இனக்கவர்ச்சியைக் காதல் என்று தவறாகப் புரிந்து கொண்டு படிப்பில் கவனம் செலுத்தாமல் இளம் வயதிலேயே திருமணம் செய்து கொள்ளும் பழக்கமும் ஒரு சில இடங்களில் காணப்படுகிறது. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தவும், முன்னேற்றப்பாதையில் பயணிக்கவும், வாழ்க்கையில் வெற்றி பெறவும் ஜெபிப்போம்.

# பச்சோந்தி



தவிர்க்கப்பட வேண்டிய உணவுப் பட்டியலில் **பச்சோந்தி** லேவியராகமம் 11:30 இல் இடம்பெற்றிருக்கிறது. அவ்வுயிரினத்தைக் குறித்து அலசுகிறது இக்கட்டுரை.

ஆங்கிலத்தில் பொதுவாக Chameleon என அழைக்கப்படும் **பச்சோந்தி** என்பது செதிலும் முதுகெலும்பும் கொண்ட ஊர்வன (Chordiata Reptiles) பிரிவைச் சேர்ந்த ஒரு பல்லி இனமாகும். இப்பல்லிக் குடும்பத்தில் மொத்தம் 203 வகைகள் உள்ளன. இக்குடும்பத்தின் பெரும்பாலானவை பச்சை நிறமுடையதாலும், ஊர்ந்து செல்வதாலும் பச்சோந்தி என்று பொதுப் பெயரிட்டு அழைக்கப்படுகின்றது. பச்சோந்திகள் பயந்த சுபாவத்தை கொண்ட உயிரினம். பச்சோந்திகள் துணையை ஈர்ப்பதற்காக நிறங்களை மாற்றுகின்றன. இவற்றின் சராசரி வாழ்நாள் காலம் 12 ஆண்டுகள் எனினும் சூழலியல், சவால்கள் காரணமாக பச்சோந்திகள் 10 ஆண்டுகள் வரை நீண்ட காலம் உயிர் வாழ்வது கடினமே!

வெப்பமான பகுதி (Temperate Region)களில் குறிப்பாக ஆப்பிரிக்கா மற்றும் மடகாஸ்கர் தீவிலும் ஏராளமான பச்சோந்திகள் எண்ணிக்கையில் அதிக அளவில் வாழ்கின்றன. மேலும் குளிர் மண்டலங்களான தெற்கு ஐரோப்பா, ஸ்பெயின் மற்றும் ஆசிய நாடுகளிலும் காணப்படுகின்றன. ஆப்பிரிக்காவின் பிரதான நிலப்பகுதியிலும் வாழ்கின்றன. சில இனங்கள் வடக்கு ஆப்பிரிக்கா, தெற்கு ஐரோப்பா நாடுகளான போர்ச்சுகல், ஸ்பெயின், இத்தாலி, கிரீஸ் மற்றும் மத்திய கிழக்கு, தென் இந்தியா, இலங்கை மற்றும் மேற்கு இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் வாழ்கின்றன.

27 அங்குலங்கள் வரை வளரக்கூடிய மடகாஸ்கர் பார்சன்ஸ் (Parson's) பச்சோந்தியே மிகப்பெரிய பச்சோந்தியாகும். இவை அதிகபட்சமாக 60 சென்டிமீட்டர் நீளத்திற்கு வளர்கின்றன. இவை அளவில் பெரியதாக இருப்பதால் பூச்சிகளையும் சிலந்திகளையும் விரும்பி உண்ணுவதுடன், சிறிய எலிகள், சிறுசிறு பறவைகள், வெட்டுக்கிளிகள், புழுக்கள், வண்டுகள், ஈக்கள், கரப்பான் பூச்சிகள் போன்றவற்றைப் பிடித்துச் சாப்பிடும் வழக்கத்தை வைத்துள்ளன. அளவில் பெரிய வகை பச்சோந்திகள் சிறிய பறவைகளையும் மற்ற பல்லிகளையும் கூட பிடித்து சாப்பிடும் இயல்புடையனவாக உள்ளன. சில வகை பச்சோந்திகள் தாவரங்களையும் சாப்பிட்டு உயிர் வாழ்கின்றன. தீக்குச்சியின் மருந்து முனை அளவே வளரக்கூடிய ப்ரூகெசியா மைக்ரா (Brookesia micra) பச்சோந்தியே உலகிலேயே சிறிய ஊர்வன என்று கருதப்படுகிறது. குட்டி வாலும் சற்று பெரிய தலையும் கொண்டது. இலை மடிப்பில் பகல் முழுவதும் இருக்கக்கூடியது. இரவில் மரத்தில் வாழும் தன்மை கொண்டது. ப்ரூகேசியா இனத்தில் 30 சிற்றினங்கள் உண்டு. இவை பெரும்பாலும் பழுப்பு நிறமுடையவை. சமவெளி நிலப்பகுதிகளில் வாழ்கின்றன.

பச்சோந்திகள் தாங்கள் வசிக்கும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தங்களுடைய உடல் நிறத்தை மாற்றிக் கொள்ளும் அதிசய தன்மை கொண்டிருக்கின்றன. பசுமையான மரத்தில் இருக்கும் போது இவற்றின் உடலானது பச்சையாகக் காணப்படுவதற்கேற்ப

இவற்றின் உடலில் பசுஞ்செல்கள் (green melanin pigments) அமைந்துள்ளன. சூரிய வெளிச்சமானது இவற்றின் உடலில் பட்டதும் அதனால் நிறச்செல்கள் சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றமடைந்து உடலானது நிறமாற்றம் பெறுகிறது. உடல் வெப்பநிலையைக் கட்டுப்படுத்துவதற்கும் அல்லது ஊடுருவும் நபர்களை விட்டு விலகி இருக்கவும், சூழ்நிலைகளுக்கேற்ப தன்னுடைய உடல் நிறத்தை மாற்றிக் கொள்ள சுமார் பத்து வினாடிகளில் இவற்றின் உடலானது பச்சை, மஞ்சள் மற்றும் கரும்பழுப்பு என பல வண்ணங்களில் மாற்றமடைகின்றன.

பச்சோந்திகளின் தலையும் உடலும் 8 அங்குலம் முதல் 12 அங்குலம் வரை காணப்படுகின்றன. பச்சோந்திகளுக்கு நீளமான வால் அமைந்துள்ளது. இவற்றின் நீளமான வாலானது ஒரு கையைப் போல செயல்படுகிறது. மரத்தின் சிறு கிளைகளில் இவை தங்களுடைய வால் நுனியைச் சுற்றிப் பிடித்து பாதுகாப்பாக அமர்ந்து கொள்ளுகின்றன.

பச்சோந்திகளின் நாக்கு மின்னல் வேகமானது. மணிக்கு 60 மைல் வேகத்தில் நகரும். பச்சோந்திகளின் நாக்குகள் அவற்றின் உடலை விட இரண்டு மடங்கு நீளமாக இருக்கும். நாக்கின் முனையில் பசை சுரக்கிறது. பச்சோந்தி பூச்சிகளைப் பார்த்துவிட்டால் உடனே தன் நீளமான நாக்கை நீட்டி பசையால் பூச்சியை ஒட்டி வாய்க்குள் உள்ளிழுத்து அந்த பூச்சியைத் தின்று விடும். அவைகளின் நாக்கு தசைகள் மற்றும் எலும்புகள் இரண்டையும் கொண்டு, நாக்குகள் மிக விரைவாகவும் சக்தி வாய்ந்ததாகவும் இருப்பதால் ஒற்றை நொடிக்குள் தங்கள் இரையைப் பிடிக்க முடியும். இரையினால் தப்பிக்கவே முடியாது.


பச்சோந்திகள் பெரும்பாலும் மரத்திலேயே வாழ்கின்றன. இவை சிறிய புதர் போன்ற பகுதிகளிலும் காணப்படுகின்றன. சிறிய வகை பச்சோந்திகள் நிலப் பகுதிகளில் வாழ்கின்றன. பச்சோந்திகள் குறைந்த பட்சம் இரண்டு வருடங்களும் அதிகபட்சமாக ஐந்து வருடங்கள் மட்டுமே உயிர் வாழ்கின்றன.

பச்சோந்தி இனத்தில் ஜாக்சன் பச்சோந்தி மற்றும் ப்ளாப்ஜாக் பச்சோந்தி என்ற இரண்டு வகைப் பச்சோந்திகள் குட்டிகளை ஈனுகின்றன. ஆனால் பெரும்பாலான பச்சோந்திகள் முட்டையிட்டு குஞ்சு பொறிப்பவையாக உள்ளன. முட்டையிடுவதற்கு முன்னால் பச்சோந்தியானது மரத்திலிருந்து இறங்கி ஈரமான நிலப்பகுதியில் 4 முதல் 12 அங்குல அளவிற்கு குழியைத் தோண்டுகின்றன. தோண்டிய குழிக்குள் பெண் பச்சோந்தியானது முட்டைகளை இடும். பின்னர் குழியை மூடிவிட்டுச் சென்று விடும். முட்டைகளின் எண்ணிக்கையானது இனத்திற்கு இனம் வேறுபடுகிறது. இந்த முட்டைகளானது 4 முதல் 12 மாதங்களில் பொரிந்து குஞ்சுகளாக மாற்றமடையும்.

எதிரிகளிடமிருந்து தப்பிப்பதற்கு பச்சோந்திகள் தங்களுடைய உடலைத் திருப்பாமல் பல கோணங்களில் கண்களை உருட்டிப் பார்க்கும் ஆற்றலைப் பெற்றுள்ளன. 180 டிகிரி கிடை மட்டமாகவும் 90 டிகிரி செங்குத்தாகவும் பரந்த கண் பார்வையை செயல்படுத்தவும் முடியும். கண் பார்வை தனித்தனியாக நகரும், இதனால் ஒரு கண் முன்னும் மற்றொன்று பின்னும் பார்க்க முடியும்.

பழைய ஏற்பாட்டைப் பொறுத்தவரை இஸ்ரவேல் எனப்படும் தனித்த இனக்கூட்டத்தாருக்கு பச்சோந்திகள் விலக்கப்பட்ட உணவுப் பட்டியலில் இருந்தாலும் இவைகளை இன்றும் உணவாக உட்கொள்ளும் ஆதி பழங்குடிகளும் உள்ளனர். அதற்காக இவர்களை புறந்தள்ளுவதும் கூடாது. காரணம் தற்போது நமக்கு அளிக்கப்பட்டிருப்பது புதியதொரு ஏற்பாடு. மனித தர நிர்ணயத்தின் அடிப்படையில் புனிதமான உணவு, புனிதமற்ற / தீட்டுப்படுத்தும் உணவு என்பதெல்லாம் புறக்கணிக்கப்பட்டு உள்ளிருந்து வெளியே வருவது தான் மனிதனை உண்மையிலேயே தீட்டுப்படுத்துபவை என்பதே புதிய ஏற்பாடு. இது கிறிஸ்துவின் ஏற்பாடு.

பூச்சிகளிடம் செல்வதற்கு பச்சோந்திக்கு சரியான வழிகாட்டுங்கள் குழந்தைகளே.



# உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட

இயேசுவைக் காணவும் அவருடைய போதனைகளைக் கேட்கவும், அவரால் சுகம் பெறவும் எப்போதும் ஒரு கூட்டம் அலை மோதிக்கொண்டிருக்கும்.

ஒருமுறை இயேசு ஒரு வீட்டில் அமர்ந்து மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதும், அவர்களுக்குப் போதிப்பதுமாய் இருந்தார். அந்த கூட்டத்தினரிடையே எருசலேம் தேவாலய உளவாளிகளும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் இயேசுவின் மேல் பழிசுமத்த தருணம் பார்த்துக் காத்திருந்தவர்கள்.

வீட்டு வாசல், சுற்றுப்புறம் எங்கும் மக்கள் திரள். ஏராளமான நோயாளிகள் அந்தக் கூட்டத்தில் வந்திருந்தார்கள். எப்படியாவது இயேசுவின் நோய் தீர்க்கும் கரம் தன் மேல் பட்டால் தம்முடைய வாழ்நாள் கவலை மறைந்து விடுமே என்று அவர்கள் காத்திருந்தார்கள்.

அந்த ஊரில் திமிர்வாதத்தால் (முடக்குவாதம்) பாதிக்கப்பட்ட ஒரு மனிதனும் இருந்தார். அவரால் நடக்கவும் முடியாது, அசையவும் முடியாது ஏன் பேசக்கூட முடியாது. படுக்கையே உலகமாக வாழ்ந்து கொண்டிருந்தார் அவர். யாருடைய மருத்துவக் கரமும் அவரைக் குணப்படுத்தவில்லை. அவரது உறவினர்கள் 4 பேர் இயேசுவைப் பற்றியும் அவருடைய குணமாக்கும் வரத்தைக் குறித்தும் அறிந்திருந்தனர்.

இயேசு கப்பர்நகூமில் இருப்பதை அறிந்த அந்த 4 பேர் அவரை இயேசுவிடம் கூட்டிக் கொண்டு போக முடிவெடுத்தார்கள். அவரை இயேசுவிடம் கூட்டிச் சென்றால் சுகம் கிடைக்கும் என்று அவர்கள் உறுதியாக நம்பினார்கள். அவர்கள் இயேசு போதித்துக் கொண்டிருந்த வீட்டை அடைந்தார்கள்.



வீட்டை அடைந்த அவர்களுக்கு மிகுந்த அதிர்ச்சி! வீடு மக்கள் கூட்டத்துக்குள் மூழ்கிக் கிடந்தது. தனிமனிதனாக வீட்டை நெருங்குவதே இயலாத நிலை. கட்டிலோடு வீட்டுக்குள் நுழைவதைப் பற்றி கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. அவர்கள் வீட்டின் பின்புறமாகச் சென்றார்கள். அந்த திமிர்வாதக்காரரைக் கட்டிலோடு சுமந்து கொண்டு வீட்டின் கூரையில் ஏறினார்கள். கூரையை உடைத்துத் திறப்பு உண்டாக்கினார்கள். அவரைக் கட்டிலோடு இயேசுவின் முன்னால் இறக்கினார்கள். அவர்களுடைய நம்பிக்கையைக் கண்ட இயேசு பிரமித்தார். சுற்றும் முற்றும் பார்த்தார். பின் தனக்கு முன்னால் கட்டிலோடு கீழே இறக்கப்பட்ட அந்த மனிதனை நோக்கி,

‘மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன’ என்றார்.

இயேசு வழக்கமாக குணம்பெறு என்றோ உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கியது என்றோ தான் சொல்வது வழக்கம். அவர் குணமாக்கும் போது, ‘பாவங்கள் மன்னிக்கப்பட்டன’ என்று இதுவரை சொன்னதில்லை. இப்போது தான் சொல்கிறார்.

வேதபாரகர்கள் திடுக்கிட்டார்கள்.

‘இவன் ஏன் இப்படிப் பேசுகிறான். பாவங்களை மன்னிக்க இவன் யார்? பாவங்களைத் தேவன் ஒருவர் தான் மன்னிக்க முடியும்’ அவர்கள் மனதில் எரிச்சலடைந்தார்கள்.

உளவாளிகளுக்கு ஒரு தகவல் கிடைத்துவிட்டது. இயேசு தேவ நிந்தனை செய்கிறார். தேவன் மட்டுமே பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் கொண்டவர், இவர் பாவங்களை மன்னிப்பதாகக் கூறி தன்னையும் தேவனைப் போல காட்டிக் கொள்கிறார். இது சாவுக்குரிய பாவம். உளவாளிகள் உள்ளுக்குள் சொல்லிக் கொண்டார்கள். இயேசு அவர்களைத் திரும்பிப் பார்த்தார்.

‘ஏன் உங்கள் உள்ளங்களில் அப்படி நினைக்கிறீர்கள்? எழுந்து படுக்கையைத் தூக்கிக் கொண்டு போ என்று இவரிடம் நான் சொல்லியிருக்க முடியும். அது எனக்கு மிகவும் எளிது. ஆனாலும் மனுஷ குமாரனுக்குப் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் உணரவேண்டும் என்பதற்காகவே இப்படிச் சொல்கிறேன்’ என்றார்.

இயேசுவின் வார்த்தைப் பிரயோகத்தைப் பார்த்த வேத பாரகர்களுக்கு இன்னும் அதிர்ச்சி. ஏனென்றால் அவர்களுடைய பழைய தீர்க்கதரிசிகளில் ஒருவரான தானியேல் ‘மனுஷ குமாரன் வானத்திலிருந்து மண்ணுக்கு இறங்கி வருவார்..’ என்று குறிப்பிட்டிருந்தார்.

இயேசு தன்னை தானியேல் தீர்க்கத்தரிசி சொன்ன தேவனாகக் காட்டிக் கொள்கிறார் என்பது அவர்களுக்குப் புரிந்தது. ஆனால் வெளிப்படையாக எதுவும் பேசாமல் அமைதிகாத்தனர். ஏனென்றால் அங்கே இருந்த கூட்டத்தில் ஒருசிலரைத் தவிர அனைவரும் இயேசுவின் ஆதரவாளர்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

இயேசு திமிர்வாதக்காரரிடம் திரும்பி ‘நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட’ என்றார்.

அதுவரை உடல் அசைவில்லாமல் கிடந்த அவருடைய உடல் மெல்ல அசைந்தது. அவர் மெல்ல எழுந்தார். கூட்டம் ஸ்தம்பித்தது. அவர் கால்களைத் தரையில் ஊன்றினார். வலுவற்றுக் கிடந்த கால்கள் இப்போது சுயமாக நிற்கின்றன. அவர் அந்த மக்கள் கூட்டத்துக்கு முன்பாகவே தன்னுடைய படுக்கையைத் தூக்கிக் கொண்டு வெளியேறினார். இயேசு தேவ குமாரன் எனும் இயேசுவின் வெளிப்படுத்துதல் மக்களை பரவசப்படுத்தியது.



# இயேசுவும் திமிர்வாதக்காரனும்

**மாற்கு 2:1-12 வரை படித்து கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

1. எந்த ஊரில் இயேசு மக்களுக்குப் போதித்தார்?
2. எத்தனை பேர் திமிர்வாதக்கார மனிதனை இயேசுவிடம் சுமந்து சென்றார்கள்?
3. திமிர்வாதக்காரனை சுமந்துகொண்டு வந்தவர்கள் ஏன் இயேசுவை நெருங்க முடியவில்லை?
4. திமிர்வாதக்காரனை இயேசுவிடம் எப்படி கொண்டு போனார்கள்?
5. இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி முதலில் என்ன கூறினார்?
6. பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு ...................... உண்டு.
7. தேவன் ஒருவரேயன்றி பாவங்களை மன்னிக்கத் தக்கவர் யார் என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்துக்கொண்டிருந்தது யார்?
8. மக்கள் ஏன் தேவனை மகிமைப்படுத்தினார்கள்?
9. நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று சொன்னது யார்?
10. எல்லா நோய்களையும் இயேசுவால் குணமாக்க முடியுமா?

விடைகள் 22ஆம் பக்கம் பார்க்கவும்

நவ. 14

# இனிய குழந்தைகள் தின வாழ்த்துக்கள்

நாளைய
சிம்மாசனங்களின்
சொந்தக்காரர்கள்
நாளைய
சிகரங்களின்
கிரீடங்கள் நீங்கள்.

பொறுமையாய் காத்திருங்கள்
காத்திருக்கும்
பாறைகளே சிலைகளாகும்.
முரண்டு பிடிப்பவையோ
உடைந்து தெறிக்கும்.

பாதாளத்தையும் புதைத்து வைக்கும்
வலிமை படைத்தவர்கள்.
சோம்பலில் படுக்கையில்
சுருண்டு விடாதீர்கள்.

வெளியேறாத சூரியன்
ஒளிதருவதில்லை.
ஓடாத நதியில்
இசை இருப்பதில்லை.
இயங்கிக் கொண்டே இருங்கள்

பலவான் கையிலுள்ள
அம்புகள் நீங்கள்!
விரல்களை
டிஜிடல் கருவிகளில்
ஒட்டி வைக்க வேண்டாம்.

கீழ்ப்படி இல்லாமல்
மேல்படி இல்லை
கீழ்ப்படிதல் இல்லாமல்
முன்னேற்றம் இல்லை.

பொய்யின் பிள்ளைகள்
வெற்றிகளின்
கிளைகளில் கூடுகட்டுவதில்லை.
வாய்மையை
வாழ்க்கையாக்கிக் கொள்ளுங்கள்.

ஒரு சிறு துளியே
பெருமழையின்
துவக்கம்.
ஒரு சிறு தவறே
பெருங்குற்றத்தின்
துவக்கம்.
தவறுகளின் முளைகளை
துவக்கத்திலேயே
தறித்தெறியுங்கள்.

விரைவில் தூங்கி
விரைவில் எழுங்கள்,
உடலை மதித்து
பயிற்சி எடுங்கள்,
நல்லுணவால்
நலம் பேணுங்கள்

ஒரு துளி
விஷம் போதும்
உயிரை எடுக்க,
ஆரோக்கிய வாழ்வை
விலக்காமல் இருங்கள்.

நீங்கள்
குயவன்கை களிமண்.
வனையும் பொறுப்பு
பெற்றோரிடம் இருக்கிறது.

பெற்றோர்
கரங்களை விட்டு
நழுவாமல் இருங்கள்
வழிகளை விட்டு
வழுவாமல் இருங்கள்

நீங்கள்
பாத்திரங்கள்,
உச்சமானதை மட்டுமே
உள்ளத்தில்
மிச்சமின்றி நிறையுங்கள்.






குழந்தை வளர்ப்பு என்பது ஒரு கலை. பொதுவாக குழந்தைகள் தாங்கள் நினைப்பது போல செயல்பட வேண்டும் என்றும், தாங்கள் விரும்புவது போல வேண்டும் என்றும் நினைக்கின்றனர். குழந்தைகள் நமது கையில் இருக்கும் களிமண் போல. அதை நம்முடைய விருப்பத்துக்கு ஏற்ப வனைய முடியும். அதற்கு முக்கியமாக கீழ்க்கண்ட பத்து விஷயங்களைக் கவனிக்க வேண்டும்.

1 பெற்றோர் குழந்தைகளுக்கு நல்ல ஒரு முன்மாதிரியாக விளங்க வேண்டும். பெற்றோரின் செயல்களை உள் வாங்கியே குழந்தை வளரும். தினமும் தன் தந்தையிடம் பர்சைக் கேட்டு அடம்பிடிக்கும் ஒரு குழந்தையிடம் தந்தை பர்சை தூர எறிவது போல பாவ்லா காட்டுவது வழக்கம். இதை கவனித்து வளர்ந்தது குழந்தை. ஒருநாள் ரயிலில் பயணம் சென்று கொண்டிருந்தபோது குழந்தை தந்தையிடமிருந்த பர்சை எடுத்து சன்னல் வழியேவெளியே எறிந்து விட்டது. குழந்தைகள் பெற்றோரின் செயல்களை உள்வாங்கி செயல்படும் என்பதற்கு இந்தச் சிறு நிகழ்வை ஒரு சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம். குழந்தைகளுடன் அமைதியாகவும், தெளிவாகவும் அன்பாகவும் பேசுங்கள். குழந்தைகளும் அதையே பின்பற்றும். குழந்தைகளிடம் நீங்கள் கோபமாகவும், எரிச்சலுடனும் பேசினால் குழந்தைகளும் அதையே கற்று வளரும்.

2 குழந்தைகளின் செயல்கள் உங்களை எப்படிப் பாதிக்கின்றன என்பதை அமைதியாகவும் தெளிவாகவும் அவர்களுக்கு உணர்த்துங்கள். மூன்று வயதான ஒரு குழந்தை உங்கள் இடத்திலிருந்து உங்கள் மனநிலையைப் புரிந்து கொள்ளும் பக்குவத்தைப் பெற்று விடுகிறது என்கின்றனர் மருத்துவர்கள். நான் எழுதிக்கொண்டிருக்கிறேன் தொந்தரவு செய்யாமல் போய் விளையாடு என்று சொன்னால் அதைப் புரிந்து கொள்ளும் மனநிலை அந்த சிறு வயதிலேயே குழந்தைக்கு வாய்த்து விடுகிறது.

3 குழந்தைகள் செய்யும் சிறு சிறு செயல்களுக்கும் அவர்களைப் பாராட்ட வேண்டும். ஆறுமுறை பாராட்டினால் ஒரு முறை தவறை சுட்டிக் காட்டலாம் என்னும் கணக்கு சிறந்தது என்கின்றனர் நிபுணர்கள். அதிக எதிர்மறை கருத்துக்கள் குழந்தைகளைப் பாதிக்கும். ஆனால் பெற்றோர் தங்களைக் கண்டுகொள்ளாமல் இருப்பதை விட திட்டுவது மேல் என்றே குழந்தைகள் நினைக்கின்றனவாம். குழந்தைகளைக் கண்டு கொள்ளாமல் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தால் குழந்தை ஓடிச் சென்று தொலைக்காட்சியை அணைப்பது இதனால் தான். எப்படியேனும் கவனத்தைத் தன்பக்கம் திருப்ப வேண்டும் எனும் குழந்தையின் ஆதங்கம் தான் அது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எனவே குழந்தையின் செயல்களை ஆழமாகக் கவனியுங்கள். ஒவ்வொரு சரியான செயலையும் தவறாமல் பாராட்டுங்கள்.

4 குழந்தைகள் விளையாடும் இடத்திற்கு இறங்கிச் சென்று குழந்தையோடு குழந்தையாக உரையாடுவதே சிறந்தது. அவர்கள் தரையில் அமர்ந்தாலும், வெளியே மணலில் புரண்டாலும் அவர்கள் அருகில் அமர்ந்திருந்து உரையாடுங்கள். குழந்தைகள் பேசுவதை கவனமுடன் கேட்டு பதிலளியுங்கள். அதை குழந்தைகள் மிகவும் அதிகமாக விரும்புகின்றனவாம். குழந்தைகளின் பேச்சுகள் கவனிக்கப்படாமல் போகும்போது அவை மனரீதியான பாதிப்பை அடைகிறதாம்.

5 நீங்கள் கொடுக்கும் உறுதி மொழியை நிறைவேற்றுங்கள். அது மிக மிக முக்கியம். குழந்தைகளுக்கு உங்கள் வார்த்தைகளின் மீது நம்பிக்கை எழவும், உங்களிடம் குழந்தை பாதுகாப்பை உணரவும் அது வழி வகுக்கும். வெறுமனே உங்கள் விருப்பம் நிறைவேறுவதற்காக போலி வாக்குறுதிகளை வழங்காதீர்கள். 'ஒழுங்கா சாப்பிட்டா கடைக்குக் கூட்டிப் போகிறேன்', 'அமைதியா இருந்தா சாக்லேட் வாங்கி தரேன்' என எது சொன்னாலும் அதை நிறைவேற்றுங்கள். நிறைவேற்ற வேண்டும் எனும் சிந்தனையில் நீங்கள் உறுதிமொழிகள் வழங்கும் போது உங்கள் உறுதிமொழிகளும் நேர்மையாய் இருக்கும். குழந்தைகளும் உங்களிடம் நம்பிக்கை வளர்க்கும்.

6 குழந்தைகளுக்கு சில பொருட்கள் மிகவும் உற்சாகத்தைக் கொடுக்கும். கண்ணாடி அணிந்திருக்கையில் கண்ணாடியைப் பிடுங்கி எறிவது குழந்தைக்குப் பிடிக்கும் என்றால் கண்ணாடியை மறைவாக வைத்திருக்க முயலுங்கள், முடிந்த மட்டும்.

7 உங்கள் குழந்தை ஏதேனும் சுவாரஸ்யமாய் செய்து கொண்டிருந்தால் அது உங்களைப் பாதிக்காதவரையில் கண்டு கொள்ளவேண்டாம். உங்கள் சட்டங்களை குழந்தைகளின் விளையாட்டில் வரையறை செய்ய வேண்டாம். குழந்தை ஒரு எறும்பை பின் தொடர்வதை பெரிதும் விரும்பினால் விட்டு விடுங்கள். அதை விடுத்து 'அதெல்லாம் பண்ணாதே' என்ற அதட்டல் தேவையில்லை. குழந்தையின் போக்கில் குழந்தையை வளர விடுவது குழந்தையின் தன்னம்பிக்கையை அதிகரிக்கும். பெற்றோருடன் அதிக கருத்து வேற்றுமை, மன வருத்தம் வருவதையும் தவிர்க்கும்.

8 குழந்தையிடம் 'செய்யாதே' என்று ஒரு செயலை வலியுறுத்துகிறீர்கள் எனில் அதில் நீங்கள் உறுதியாய் இருங்கள். மனைவி 'செய்யாதே' என்று சொல்ல, கணவன் 'செய்யட்டும் பரவாயில்லை' என்று சொல்லி குழப்பாதீர்கள். சொல்ல வேண்டியதை நேரடியாகவும், எளிமையாகவும் சொல்லுங்கள். செய்யாதே என்று சொல்லப்படுவதைச் செய்வதில் எல்லோரையும் விட குழந்தைகள் ஆர்வமாய் இருக்கும் என்பதை புரிந்து கொள்ளுங்கள். சில விஷயங்களை குழந்தைகளின் தவறுகளிலிருந்து குழந்தைகளே கற்றுக் கொள்ளும். அதை தடுக்க வேண்டாம். வீட்டுப் பாடம் எழுத ஒரு நாள் மறந்தால், அதற்குரிய தண்டனை பெறட்டும். மறு நாளிலிருந்து நினைவில் வைத்திருப்பார்கள்.

9 குழந்தைகள் முக்கியமானவர்கள் எனும் நிலையை குடும்பங்களில் உருவாக்க மறக்க வேண்டாம். சற்று வளர்ந்த குழந்தைகளை வீட்டின் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்தாலோசிப்பதும், கலந்து பணிகளைச் செய்ய வைப்பதும் சிறந்தது. அது குழந்தைகளின் தன்னம்பிக்கையையும், இருப்பையும் வலிமையாக்கும். கிண்டல், காயம் இல்லாத நகைச்சுவை உணர்வை குடும்பத்தில் குழந்தைகளோடு பகிர்ந்து கொள்ளுங்கள். சேர்ந்து உண்பதும், சேர்ந்து சிரிப்பதும் பலமான குடும்ப உறவின் பாலம்.

10 குழந்தைகளுக்கு தோல்விகளையும் பழக்குங்கள். கேட்பதை எல்லாம் கொடுப்பதோ, சொல்வதை எல்லாம் செய்வதோ மிகவும் தவறானது. அத்தகைய குழந்தைகள் திடீரென பள்ளித் தேர்வில் வரும் ஒரு தோல்வியைக் கூட சந்திக்க முடியாமல் முடங்கி விடுவார்கள். எனவே தோல்விகளையும் பழக்குங்கள். தோல்விகளும், வெற்றிகளும் கலந்ததே வாழ்க்கை எனும் தத்துவம் அவர்களுக்குப் புரிய வேண்டியது அவசியம்.

## “திமிர்வாதக்காரரை குணப்படுத்திய இயேசு” தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக. (வாசிக்க: மாற்கு 2:1-12)

படுக்கை
பாவங்கள்
அதிகாரம்
திமிர்வாதம்
இயேசு
கப்பர்நகூம்



கூரை
கலிலேயா
பரிசேயர்
நான்கு பேர்
மனுஷகுமாரன்
விசுவாசம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ள் | க | ப் | ப | ர் | ந | கூ | ம் | பா | தி |
| வி | ங் | கை | நா | தி | மி | ர் | வா | த | ம் |
| பா | வ | ங் | க | ள் | ஷ | ன் | னு | கூ | ரை |
| வி | கு | லே | ப | ம் | வா | க | இ | அ | லி |
| சு | ப | மா | டு | அ | சே | லி | மி | தி | ரி |
| வா | ரி | ரை | க் | பே | க | லே | ர் | கா | க் |
| ச | சே | இ | கை | டு | க | யா | யே | ர | சு |
| ம் | ய | யே | நா | ன் | கு | பே | ர் | ம் | யா |
| கூ | ர் | சு | ம | னு | ஷ | கு | மா | ர | ன் |

# மன்னிப்பு



வீல் சேரில் அமர்ந்திருந்தாள் அந்த ஐந்து வயதுச் சிறுமி கேய் லீ ஹேரியட். இடம் அமெரிக்காவின் பாஸ்டன் நகர நீதிமன்றம். 2003ம் ஆண்டில் அவளுக்கு மூன்று வயதாக இருக்கும்போது தான் அந்தத் துயரம் நடந்தது. ஒரு நாள் சகோதரியுடன் உற்சாகமாய்ப் பாட்டுப் பாடிக்கொண்டிருந்த போது எங்கிருந்தோ பறந்து வந்த மூன்று துப்பாக்கிக் குண்டுகள் அவளுடைய முதுகெலும்பை உடைத்தன. பறவைக்கு வீல் சேரே வாழ்க்கையானது. குற்றவாளி பிடிபட்டு, பல மாத விசாரணைகளுக்குப் பின் நீதிமன்றத்தில் நின்றிருந்தான் 29 வயது நிரம்பிய ஆண்டனி வாரன். நீதிமன்றம் அவனைக் குற்றவாளி என தீர்ப்பிட்டது.

சிறுமி கேய் லீ ஹேரியட் அவனருகில் சென்றாள். திடீரென தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். பார்த்தவர்களெல்லாம் கலங்கினார்கள். பின் சிறுமி அவனிடம் சொன்னாள், ‘‘நீங்கள் செய்தது தவறு. ஆனாலும் உங்களை நான் மன்னிக்கிறேன்’’. ஐந்து வயதுச் சிறுமியின் அந்தச் செயல் அந்த நீதிமன்றத்தையே நிலைகுலைய வைத்தது. பார்த்துக் கொண்டிருந்தவர்களெல்லாம் நெகிழ்ந்தார்கள். அதுவரை சுட்டவன் மீது கொடும் பகையுடன் இருந்த அவளுடைய தாயும் உடனடியாக அந்த நபரை மன்னித்தார்! இந்த நிகழ்வு அமெரிக்காவின் அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பாகி பலரையும் தொட்டது. அவ்வளவு ஏன்... தனது கணவரையும் 2 பிள்ளைகளையும் நெருப்பிற்கு இரையாக்கிய மதவாத பஜ்ரங்தள் அமைப்பின் தாராசிங்கை மன்னித்த கிளாடிஸ் ஸ்டெயின்ஸ் அவர்கள் நிகழ்கால எடுத்துக்காட்டு.

மன்னிப்பு எனும் வார்த்தை மனுக்குலத்துக்கே உரிய மகத்துவமானது. மிகவும் எளிதாகச் செய்யக்கூடிய இந்தச் செயலைச் செய்வதில் தான் இன்று பலருக்கும் உலக மகா தயக்கம். அதனால் தான் நமது வாழ்க்கை சண்டை, அடிதடி, வெறுப்பு, கோபம், நோய்கள் என துயரத்தின் தெருக்களில் நொண்டியடிக்கிறது.

ஒருவர் உங்களைப் பற்றி ஏதோ தவறாகச் சொல்லி விட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த நபர் மீது நீங்கள் கோபம் கொள்ளும்போது உங்களுடைய மனதில் ஒரு கல்லை வைக்கிறீர்கள். அது கனக்கிறது. அந்தக் கோபத்தை மீண்டும் மீண்டும் நினைக்க நினைக்க ஒவ்வொரு கல்லாய் அடுக்குகிறீர்கள். பாரம் கூடுகிறது, உடல் நிலை பாதிக்கிறது. இரத்த அழுத்தம் எகிறுகிறது. எல்லை மீறினால் மாரடைப்பே வந்து விடுகிறது. ஆனால் இந்த நிகழ்வின் துவக்கத்திலேயே நீங்கள் அந்த நபரை மன்னித்து விட்டால் அத்துடன் சிக்கல்கள் எல்லாம் முடிந்து விடும்.

மன்னிப்பது கோழைகளின் செயல் என பலரும் நினைக்கிறார்கள். ‘‘எதிரி நாட்டு மன்னனைப் போரிட்டு அழிக்கும் பரம்பரை நாம்’’ என மீசை முறுக்குகிறார்கள். உண்மையில் மன்னிப்பது தான் போரை விட வீரமானது. போர் உடல்களைத் தான் வெற்றி கொள்ளும், மன்னிப்பு தான் மனதையே வெற்றி கொள்ளும். இதைத் தான் மகாத்மா சொன்னார், ‘‘மன்னிப்பு பலவான்களின் செயல், பலவீனர்களால் மன்னிக்க முடியாது.’’

பல வேளைகளில் தவறிழைக்கும் நபர்கள் தவறை உணர்ந்து தட்டுத் தடுமாறி மன்னிப்புக் கேட்பதுண்டு. அப்படிப்பட்டவர்களை நிபந்தனையற்று மன்னியுங்கள். ''சே.. இதுல மன்னிப்பு கேக்க என்ன இருக்கு'' என்பது போன்ற வார்த்தைகள் நட்பையும், உறவையும் பலமடங்கு இறுக்கமாக்கும்.

இன்றைய மனித உறவின் பலவீனங்கள் பலவேளைகளில் திடுக்கிட வைக்கின்றன. பெற்றோரை மன்னிக்க மறுக்கும் பிள்ளைகள், பிள்ளைகள் மீது வெறுப்பு வளர்க்கும் பெற்றோர், அரிவாளுடன் அலையும் சகோதரர்கள். வன்மத்துடன் திரியும் தம்பதியர். இவை எல்லாவற்றுக்குமான சர்வ ரோக நிவாரணி மன்னிப்பு என்பதை உணர்கிறீர்களா?

மன்னிப்புக் கேட்கும்போதும் அடுத்தவரைக் குற்றம் சாட்டும் மனநிலையுடனோ, பழி போடும் மனநிலையுடனோ, ரொம்பவே தற்காப்பு மனநிலையுடனோ பேசாதீர்கள். ''செய்தது தவறு வருந்துகிறேன்..'' எனும் நேர்மையுடன் பேசுங்கள். உடனடியாக மன்னிப்புக் கிடைக்கவில்லையேல் பதட்டப்படாதீர்கள். சில ஈகோ பார்ட்டிகள் மன்னிப்பு வழங்க நேரம் எடுத்துக் கொள்வார்கள் என்பதை மனதில் இருத்துங்கள்.

மன்னிப்பைப் பற்றி மருத்துவம் சொல்வது கதிகலங்க வைக்கிறது. ''நீங்கள் ஒரு நபர்மீது எரிச்சலும், கோபமும் கொள்ளும்போது உங்கள் மூளையில் ஒரு வடிவம் உருவாகிறது. உங்கள் எரிச்சலும், கோபமும் அதிகரிக்க அதிகரிக்க அந்த வடிவம் ரொம்ப வலுவாக மாறிவிடுகிறது. அந்த வலுவான நிலைமை பின்னர் உங்கள் இயல்பாகவே மாறிப் போகிறது. அதன் பின் கோபமும், எரிச்சலும் இல்லாமல் வாழ்வது உங்களுக்கு குதிரைக் கொம்பாகிவிடும்'' என்கின்றன மருத்துவ ஆராய்ச்சிகள். மன்னிக்கும் பழக்கமுடைய மனிதர்கள் ஆனந்தமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறார்கள் என்கின்றன பல்வேறு ஆராய்ச்சி முடிவுகள்.

அடுத்தவர்களுடைய மனநிலையில் இருந்து கொண்டு நமக்கு நேர்ந்த கசப்பான நிகழ்வை யோசித்துப் பார்த்தால், பெரும்பாலான கோபங்கள் விலகிவிடும். குறிப்பாக கணவன் மனைவி, குடும்பத்தினருக்கு இடையேயான பிணக்குகள், எரிச்சல்கள், வெறுப்புகள் போன்றவையெல்லாம் கதிரவன் கண்ட பனிபோல விலகிவிடும்.

உண்மையான அன்பு இருக்கும் இடத்தில் மன்னிக்கும் மனம் தானே முளைவிடும். மன்னிப்புக் கேட்கும் எவருக்கும், மன்னிப்பை மறுக்காதீர்கள். மன்னிப்புக் கேட்காதவர்களை மன்னிக்க மறக்காதீர்கள்.

**புத்தகப் பரிந்துரை:**



ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் எழுதிய **"Learn to forgive"** (மன்னிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்) நூல் மன்னிப்பின் மகத்துவத்தையும், அது தரும் ஆரோக்கியமான வாழ்க்கையையும் பற்றி பிரமிப்பூட்டும் வகையில் சொல்கிறது. வாங்கி வாசித்துப் பாருங்கள்.

16ஆம் பக்கத்தின் விடைகள்

## இயேசுவும் திமிர்வாதக்காரனும் - பதில்கள்

1. கப்பர்நகூம், 2. 4 பேர், 3. ஜனக்கூட்டத்தினால், 4. வீட்டின் மேற்கூரையை திறந்து, 5. மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது, 6. அதிகாரம் 7. வேதபாரகர், 8. திமிர்வாதக்காரன் குணமானதால், 9. இயேசு, 10. முடியும்

# தயாராகு



வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என விரும்பாத மனிதர்கள் இருக்க முடியாது. விரும்புவதால் மட்டுமே ஒருவர் வெற்றிகளைப் பெற்றுவிடவும் முடியாது. வெற்றிக் கதவைத் திறப்பதற்கான சாவிகள் கையில் இருக்க வேண்டியது அவசியம். அந்தச் சாவிகளில் முக்கியமானது ''தயாராதல்'' எனும் சாவி. ஒரு சூழலை எதிர்கொள்வதற்கு நம்முடைய வெற்றியும் தோல்வியும் நம்மை எந்த அளவுக்குத் தயார்படுத்திக் கொள்கிறோம் என்பதில் அடங்கியிருக்கிறது.

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் பதினாறாவது ஜனாதிபதி. மேடைப்பேச்சிலும், விவாதங்களிலும் உலகப் புகழ் பெற்றவர். மிகத் திறமையான ஜனாதிபதி, தலை சிறந்த தலைவர் என உலகின் மூலை முடுக்கெல்லாம் தன்னுடைய பெயரை எழுதியவர். ஒரு முறை அவர் வழக்கம் போல அசத்தலான ஒரு மேடைப்பேச்சை நிகழ்த்திக் கொண்டிருந்தார். கேட்டுக்கொண்டிருந்தவர்கள் அனைவரும் பிரமித்துப் போனார்கள். அதில் முன் வரிசையில் அமர்ந்திருந்த இளைஞன் ஒருவன் ரொம்பவே வசீகரிக்கப்பட்டான். பேச்சு முடிந்தபின் அவன் அவரிடம் கேட்டான்.

''சார். ரொம்ப ரொம்ப பிரமாதமா பேசறீங்க. இதன் ரகசியத்தைச் சொல்ல முடியுமா?''. ஆபிரகாம் லிங்கன் சிரித்துக் கொண்டே சொன்னார், ''நான் மேடையில் அரை மணி நேரம் பேசினதைத் தான் கேட்டாய். அதற்காக அரை நாள் நான் தயாரானதைப் பார்க்கவில்லையே''! அவருடைய அந்தப் பதிலில் அடங்கியிருந்தது அவருடைய வெற்றிக்கான ரகசியம்! ''தயாராதல்!''

அவர் மட்டுமல்ல, உலகின் புகழ் பெற்ற எல்லா பேச்சாளர்களுடைய வாழ்க்கையிலும் சுவாரஸ்யமான தயாராகும் வழிகள் அடங்கியிருக்கின்றன. கண்ணாடியின் முன் நின்று பேசுவது, வீட்டில் உள்ள நபர்களை கூட்டமாய் நினைத்து அவர்கள் முன் உரையாற்றுவது, டேப் ரிகார்டரில் ரெக்கார்ட் பண்ணிப் பழகுவது என ஒவ்வொருவருடைய வாழ்க்கை அனுபவமும் சொல்லும் பாடம் ஒன்று தான். தயாராதல் மிக முக்கியம்!

''வெற்றிக்கு மிக மிக முக்கியமான தேவை தன்னம்பிக்கை. தன்னம்பிக்கைக்கு முக்கியத் தேவை தயாராதல்!'' என்கிறார் பிரபல டென்னிஸ் விளையாட்டு வீரரான ஆர்தர் ஆஷே. வெற்றிக் கோப்பைகளுடன் கொடிகட்டிப் பறந்த காலத்தில் அவருடைய தன்னம்பிக்கையின் ரகசியம் என்ன என்ற வினாவுக்கு அவர் சொன்ன பதில் தான் இது! தயாரிப்பு இல்லாத மனிதர்கள் தன்னம்பிக்கை உடையவர்களாக இருக்க முடியாது. தன்னம்பிக்கை இல்லாத மனிதர்கள் வெற்றியாளர்களாய் ஜொலிக்க முடியாது.

விளையாட்டு வீரர்களைப் பொறுத்தவரையில் சில நிமிட விளையாட்டுக்காக ஆண்டுக்கணக்கில் தங்களைத் தயாரித்துக் கொள்வார்கள். அந்தத் தயாரிப்பு தான் அவர்களுக்கு வெற்றிக் கோப்பையைத் திணிக்கிறது.

தன்னம்பிக்கைக்கும் அதீத நம்பிக்கைக்கும் வேறுபாடு உண்டு. இரண்டு பேர் மலையேறச் செல்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒருவர் மலையேற்றத்துக்குரிய உபகரணங்களோடு மலையேறச் செல்கிறார். இன்னொருவர் எந்த ஒரு உபகரணமும்

எடுக்காமல் மலையேறச் செல்கிறார். இது தான் தன்னம்பிக்கைக்கும், அதீத நம்பிக்கைக்கும் உள்ள வித்தியாசம்.

ஒரு செயலைச் செய்யும் முன் அந்தச் செயலுக்கான அனைத்து தயாரிப்புகளையும் செய்வது தன்னம்பிக்கையாளரின் வழக்கம். அதீத நம்பிக்கை உடையவர்களோ சரியான தயாரிப்புகள் இல்லாமல் களமிறங்குவார்கள். தயாரிப்புகள் இல்லாமல் இறங்கும் மனிதர்கள் கடைசியில் அதிர்ஷ்டத்தைத் தான் துணைக்கு அழைக்க வேண்டும். தன்னம்பிக்கைக்காரருடைய வெற்றியோ முழுக்க முழுக்க அவரைச் சார்ந்தே இருக்கிறது.

சரியாய் தயாரானவன் தேர்வுக்கு எந்த விதமான பதட்டமும் இல்லாமல் செல்வான். அவனுடைய கண்களில் தன்னம்பிக்கை நட்சத்திரங்கள் சுடர்விடும். தயாராகாமல் ஏனோ தானோ என்று செல்பவனோ அதிர்ஷ்டத்தையும், அடுத்தவனையும் நம்பியே தேர்வு எழுதச் செல்வான். வெற்றி எப்போதுமே தயாராய் இருப்பவனுக்காய் தயாராய் இருக்கிறது!

ஐந்து மணி ரயிலைப் பிடிக்க நான்கு மணிக்கே கிளம்புவது ரொம்ப எளிதான வேலை. ஆனால் அதே ரயிலைப் பிடிக்க ரொம்பவே தாமதமாய்க் கிளம்பும் சூழலை நினைத்துப் பாருங்கள். எத்தனை பரபரப்பு, எவ்வளவு கஷ்டம்! சரியாய்த் திட்டமிடுதல், சரியாகத் தயாராதல் இவை இல்லாவிடில் தேவையற்ற மன அழுத்தம் நம் முதுகில் ஏறி அமர்ந்து விடுகிறது.

உட்கார்ந்து எழுதவே ஒரு இடம் இல்லாமல் கஷ்டப்பட்டார் ஒரு எழுத்தாளர். வெளியே உறைய வைக்கும் குளிர். கையில் போதுமான அளவு பணம் இல்லை. ஒரே ஒரு காபி வாங்கிக் கொண்டு அந்த காபி ஷாப்பில் பல மணிநேரம் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தார். ஒரு நாவலுக்கான முயற்சியில் தன்னைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அந்தத் தயாரிப்பு தான் அந்த எழுத்தாளரை உலகப் புகழ் பெற்ற எழுத்தாளராக்கியது. இன்று அவருடைய நாவலுக்காய் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் விடியற்காலையிலேயே கடைகளில் நிரம்பி விடுகிறது கூட்டம். அவர்தான் ஹாரிபாட்டர் நாவலை எழுதிய ஜே.ஜே ரௌலிங்கர்.

வெற்றியை நோக்கிய பயணத்தில் இந்த தயாரிப்பு ரொம்பவே அவசியம். இன்றைக்கு வெற்றியாளர்களுடைய வாழ்க்கையைப் புரட்டிப் பார்க்கும்போது புலப்படும் விஷயம் ஒன்று தான். அவர்கள் தங்கள் இலட்சியத்துக்காக தங்களைத் தயாரித்துக் கொண்டார்கள்.

அலெக்சாண்டர் கிரகாம்பெல்லிடம் ஒருமுறை கேட்டார்கள் ''உங்கள் வெற்றிக்கான ரகசியம் என்ன?'' ''வேறொன்றுமில்லை, சிறப்பாகத் தயாராவதே எனது வெற்றியின் ரகசியம்'' என்று பளிச் எனப் பதிலளித்தார் அவர்.





**தயாராதல் வெற்றியின் ரகசியம். தயாராவோம் வெற்றிகள் அவசியம்.**

விதிமுறைகளின்படி போட்டியிடாமல் எந்த விளையாட்டு வீரனாலும் வெற்றிக் கிரீடத்தை அடைய முடியாது. பாடுபட்டு விளைய வைக்கிற விவசாயியே, விளைச்சலின் முதல் பகுதி உணவை உண்பதற்குத் தகுதியானவன். நான் சொல்லிக்கொண்டிருக்கிற விஷயங்களைப் பற்றி எண்ணிப்பார். இவை பற்றிய முழுமையான அறிவை கர்த்தர் உனக்குத் தருவார் (2 தீமோத்தேயு 2:5-7).

# பச்சை நிற பச்சோந்தியே!

பச்சோந்தியின் படத்தைப் பார்த்து நீங்களே வரைந்து பழகுங்கள் குழந்தைகளே.



# வங்கிக் கணக்கின் (Bank Account) விபரம்:

ஏலிம் ஊழியங்கள் மற்றும் அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை பொருளாதார உதவிகளால் தாங்க விரும்பினாலோ, காசோலை (Cheque) / கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் அனுப்புவதாக இருந்தாலோ, கீழ்க்காணும் ஏதேனுமொரு பெயரில் எடுத்து எமது அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல் (Registered Post) அல்லது தூதஞ்சல் (Courier) மூலமாக அனுப்பலாம்.

| | | |
|---|---|---|
| 1. ACCOUNT NAME | : | MR. JOSEPH OSBORNE JEBADURAI |
| ACCOUNT NO. | : | 49 510100003062 |

| | | |
|---|---|---|
| 2. ACCOUNT NAME | : | ANTANTULLA APPAM TRUST |
| ACCOUNT NO. | : | 49510200000122 |
| BANK NAME | : | BANK OF BARODA |
| IFSC CODE | : | BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO) |
| SWIFT CODE | : | BARBINBB |
| BRANCH & CODE | : | UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951<br>CHENNAI – 600 024. |

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

**Address : J. JOSEPH OSBORNE JEBADURAI**
**50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600 024. Tamil Nadu**

| | | |
|---|---|---|
| 1. ACCOUNT NAME | : | ELIM GLORIOUS REVIVAL CHURCH |
| ACCOUNT NO. | : | 49510100000230 |

| | | |
|---|---|---|
| 2. ACCOUNT NAME | : | MR. JOSEPH OSBORNE JEBADURAI |
| ACCOUNT NO. | : | 49510100003063 |
| BANK NAME | : | BANK OF BARODA |
| IFSC CODE | : | BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO) |
| BRANCH | : | KODAMBAKKAM<br>CHENNAI - 600024 |

நிறைவான தேவ ஆசீர்வாதத்தைப் பெற்ற எலிசபெத்து. லூக்கா 1:5

Elim
GLORIOUS REVIVAL CHURCH

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்

நடத்தும்

**அனுமதி இலவசம்**

30 வது பெண்கள்

# அக்கினி அபிஷேக முகாம்



வியாழன் வெள்ளி சனி

**14 15 16 NOVEMBER**

09 AM - 01 PM

- அபிஷேகம் நிறைந்த ஆராதனை
- வல்லமையான ஜெபம்
- சத்திய வார்த்தை

PASTOR **OSBORNE** JEBADURAI



சகோதரி. **நளினி செல்வராஜ்**

சகோதரி. **பியூலா பென்ஸ்**

சகோதரி. **டிரினிட்டா சாம்**

சகோதரி. **ஹேமா ஜான்** (worship)

இடம்:
**ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்**
#50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் - 24
+919003067777,+919884908777,+919884916777

**மதிய உணவு உண்டு**

- பாவக் கட்டா?
- தீராத வியாதியா?
- பில்லி சூனியமா?
- கடன் தொல்லையா?
- வாருங்கள்

**மெய்யாகவே விடுதலையாவீர்கள்!**



உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார். யோசுவா 3:5

Sanctify yourselves, for tomorrow the Lord will do wonders among you. Joshua 3:5



## 2025ஐ சந்திக்க ஆயத்தப்படுவோம்

# ஆண்டு இறுதி

## சுத்திகரிப்புக் கூட்டம்

## YEAR END SANCTIFICATION MEETING

40 நாட்கள்



Pastor OSBORNE Jebadurai

**நவம்பர் 18-ந்தேதி திங்கட்கிழமை முதல்**

**டிசம்பர் 30-ந்தேதி திங்கட்கிழமை வரை**

**தினமும் மாலை 6.30pm -8.30pm**

இதில் குடும்பமாய் கலந்துகொண்டு தேவஆசீர்வாதத்தை பெற்றுகொள்ளும்படி அன்புடன் கேட்டுகொள்ளுகிறோம்.

**ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்**
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் சென்னை-600024
**தொடர்புக்கு : 9884908777, 9003067777**

If undelivered please return to:

**Elim Glorious Revival Church**

#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India
for 24X7 Prayer: 91-9444322200, 9444322211
Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com